9th March 1966]

திரு. து. ப. அழகமுத்து : தற்போது பழனி மலைக்குப் போவதற்கு போடப்பட்டுள்ள மின்சார விஞ்ச்சில் ஏறுமிடத்தில் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பதிழுக்கு" எனப் போர்டு போடப்பட்டுள்ளதே, அதற்குப் பொருள் என்ன என்று சொல்வார்களா? 9–00 a.m.

கனம் திரு. வெ. ராமையா : நான் இந்த போர்டைப் பார்க்கவில்லை. தேவஸ்தான அதிகாரிகளுக்கு எழுதினால் அவர்கள் அதன் பொருளை விளக்குவார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : அந்த இடத்தில் போர்டு போடப்பட்டுள்ளதன் பொருள் என்ன என்றுதான் கேட்டேன் (சிரிப்பு).

(பதில் இல்லை.)

*Seshasayee Paper Mills*

* 220 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to supply goods from the Forest Department to Seshasayee Paper concerns ; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) & (*b*) The Government have already been supplying bamboos from the Reserved Forests to the Paper Mills set up by Seshasayee Paper and Boards, Limited, at Pallipalayam, Salem district. The period of the agreement is six years from 11th April 1962. There is no proposal to supply other goods to the mills pending with Government.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, ஆறு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ½ லட்சம் டன் மூங்கில் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ஏராள நஷ்டம் வருவதாக அக்கவுண்டென்ட் ஜெனரல் குறிப்பிட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இதில் ஒன்றும் குறைபாடு இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு அதிகம் போகாமல், 25 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு கீழே போகாமல் கொடுக்கவேண்டும் என்பது அக்ரிமெண்டு. அந்த வகையில் விற்பனையாவதில் நமக்கு அதிகத்தொகை வந்து கொண்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : அந்த ஒப்பந்த ஷரத்துக்களில் உள்ள குறைபாடு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? 1963-64 இல் மட்டும் 1½ லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

[9th March 1966

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படி ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டதாக இல்லை. 1963-64-ல் பதினாறு லட்சத்து எழுபத்தோராயிரத்து நானூற்றுப் பதினொன்று ரூபாய்க்கு மூங்கில் காண்ட்ராக்ட் மூலமாக விற்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** காட்டிலாகாவில் மூங்கில் காண்ட்ராக்ட் விடும்போது—அவர் குறிப்பிட்ட ஆலைக்குக் கொடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டோடு குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வதினால் மார்க்கெட் விலையோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் நஷ்டம் ஏற்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** மொத்தத்தில் கூப்பாக ஏலம் விடுகிறோம். அவற்றில் இவ்வளவு பேப்பர் மில்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். வெட்டுக்கூலி, ஏற்றி இறக்குகின்ற கூலி எல்லாவற்றையும் பார்த்துத் தான் விடுகிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் எந்த ஒரு ஜில்லாவில் இருந்துதான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கிறதா? எல்லா ஜில்லாக்களில் இருந்தும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** குறிப்பாக நீலகிரி, கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் சென்ட்ரல், சேலம் டிவிஷன், தர்மபுரி டிவிஷன், வேலூர் கிழக்கு, வேலூர் மேற்கு ஆகிய எட்டு இடங்களில் இருந்து வெட்டிக்கொள்ள கொடுக்கப்பட்டிருக்கிறது.

### *Fishing harbour at Colachel*

* 221 *Q*.—Sri A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the amount sanctioned for the construction of the fishing harbour at Colachel in Kanyakumari district; and

(*b*) whether there is any proposal to construct a dockyard for fishing boats and pier in that port?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) கொளச்சலில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டத்தின் தொடக்க ஆய்வுக்கெனக் கீழ்க்கண்ட செலவுத் தொகையை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. மாதிரி ஆய்வுகள் நடத்துவதற்காக ஏற்ற வற்ற நிலைகள், அலைகளின் இயல்புகள் முதலியன பற்றிய தொடக்க ஆய்வு பரிசீலனை, புள்ளிவிவரங்கள் சேகரித்தல் ஆகியவற்றிற்கு. | ரூ. | 9,600 |